திருவேங்கடம் பேரூராட்சிப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 72. திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா திருவேங்கடம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்க அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா

(ஆ) ஆமெனில் அப்பணி எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்; (அ) திருவேங்கடம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்தின் கோவில்பட்டி உதவி நிர்வாக பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் ரூ. 2,50,000/- கடன் பெற்று சுலபத் தவணை முறையில் வட்டியுடன் செலுத்த திருவேங்கடம் பேரூராட்சி தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கோவில்பட்டி கோட்ட வளர்ச்சி அலுவலர் அனுப்பியுள்ள கோரிக்கை தற்போது ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு பொ. உத்திராபதி; பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே சங்கரன் கோவிலுக்குக் குடிநீர் வழங்குவது சம்பந்தமாக பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள் முடிவடையும், எப்போது வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பதில் சொல்லக்கூடிய நிலைமை இல்லை.

பெரியகொடிவேரி குடிநீர் திட்டம்

*வினா எண் 73 திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சத்தியமங்கலம் தொகுதியில் பெரியகொடிவேரி குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகிறதா?

(ஆ) இத் திட்ட வேலைகள் எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ) ஆம்.

(ஆ) இத் திட்ட பணிகள் 1982 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும் என

1981 ஆகஸ்ட் 26]

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தின் மதிப்பீடு என்ன? இதனால் பயன்பெறும் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மதிப்பீடு 71.49 லட்சம் ரூபாய் பலன் அடையக்கூடிய மக்கள் 1971 ஆம் ஆண்டுக் கணக்குப் படி 47,356; 1991 ஆம் ஆண்டுப்படி 64,600; 2006 ஆம் ஆண்டுப்படி 81,800.

திரு. ஆர். ரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டம் மிகவும் நிதானமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. துரிதமாக நடத்தப் படாததால் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமை இருக்கிறது, ஆகவே அவர்களுக்கு உதவிபுரியக்கூடிய முறையிலே விரைவிலே முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1982 ஆம் ஆண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் என்பதை நவம்பர் அல்லது அக்டோபருக்குள் முடிப்பதற்கு பரிசீலனை செய்யப் படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த கொடிவேரித் திட்டம் கைவிடப்பட்டதாகவும் அதற்கு பதிலாக கோவையிலிருந்து 3½ கோடி ரூபாய் செலவில் பவானித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டமும் இந்தத் திட்டமும் ஒன்றா, வெவ்வேறா? அப்படியானால் அது எப்போதுசெயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் எப்போது அப்படிச் சொன்னேன்?

திரு. தி. கா. நல்லப்பன் : முன்னாலே சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்படியென்றால் அதற்காகத் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாக விவாதம் வைத்து கொள்ளக் கூடாது.

வேளச்சேரி தண்டீசுவரம் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 74—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகராட்சி வேளச்சேரி, தண்டீசுவரம் நகர் பகுதியில் பொதுமக்கள் குடிதண்ணீருக்கு திறந்த குளத் துத் தண்ணீரைப் பயன்படுத்துவதை அரசு அறியுமா?